ஒரு கிராமத்தில் அருண் என்ற ஓர் இளைஞன் வாழ்ந்தான். அவன் புத்திசாலி; ஆனால் மனம் போன போக்கில் நடப்பது அவனது பழக்கம்."எனக்குப் பிடித்ததுதான் சரி" என்பதே அவன் எண்ணம். ஒருநாள் பெரியவர்கள், "அருண், இப்போது வேலை கற்று ஒழுக்கமாக நடந்து கொள். மனம்போன போக்கெல்லாம் போனால் வாழ்வு சிக்கலாகும்" என்று அறிவுரை சொன்னார்கள்.ஆனால் ஆருண் அதை கேட்கவில்லை. நண்பர்கள் கூடிய இடமெல்லாம் சுற்றி, நேரம் காலம் பார்க்காமல் நடந்து வந்தான். வேலை வாய்ப்பு கிடைத்தும்,"பிறகு பார்த்துக் கொள்வேன்"என்று அலட்சியப்படுத்தினான். ஒருநாள் அவனது தந்தை உடல்நலக் குறைவால் வேலை செய்ய முடியாமல் போனார். குடும்பப் பொறுப்பு அருண் மீது விழுந்தது. அப்போது தான் அவனுக்கு உண்மை புரிந்தது. வேலை தேட சென்ற போது,"ஒழுக்கமும் பொறுப்பும் இல்லாதவரை நம்ப முடியாது" என்று அவனை மறுத்தனர். அன்றுதான் அருண் உணர்ந்தான்.

ஓர் அரசு அலுவலகத்தில் முருகன் என்ற நேர்மையான ஊழியர் பணியாற்றி வந்தார்.அவருடன் பணியாற்றும் சுந்தரம் எப்போதும் இனிய வார்த்தைகளால் பேசுவான்."நீங்கள் எனக்கு அண்ணன் மாதிரி," "நீங்கள் இல்லாமல் இந்த அலுவலகம் இயங்காது," என்று சொல்லி முருகனின் நம்பிக்கையை முழுமையாகப் பெற்றான்.காலப்போக்கில் சுந்தரம்,"இந்த கோப்பில் கையெழுத்துப் போட்டால் போதும், நான் பார்த்துக் கொள்கிறேன்,"என்று கூறினான். உறவு போலப் பேசியதால், முருகன் எந்தச் சந்தேகமும் இல்லாமல் கையெழுத்திட்டார். பின்னர் அது தவறான முடிவாகி, குற்றம் முருகன் மீது சுமத்தப்பட்டது.விசாரணையில் சுந்தரம்,"நான் ஒன்றும் அறியவில்லை,"என்று ஒதுங்கிக் கொண்டான்.அப்போது தான் முருகனுக்கு உண்மை புரிந்தது.

**மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்**

**மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்**

LIVEWORKSHEETS